18.02.2026

அ.வ.எண். 212/2022

வா.சா.2 – திரு.லோகநாதன், த/பெ. ராமசாமி

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 18.02.2026 is accordance with the provision of Act X of 3331

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை. என்னை 2ம் வாதி காளிமுத்து சாட்சியம் அளிக்க அழைத்து வந்தார். காளிமுத்து எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் போய்க்கொண்டிருந்த பழைய தடத்தை அடைத்து விட்டதாக வழக்கு தாக்கல் செய்துள்ளார். எந்த காலையில் தடம் செல்கிறது என்றால் க.ச.எண்.465/A18, 10, 9 வழியாக செல்கிறது. பழைய கிணற்றிற்கும், புதிய கிணற்றிற்கும் மேற்படி பாதையை பயன்படுத்தி வருகின்றனர். க.ச.எண்.465/21, 465/2 காலையில் எனக்கு பூமி உள்ளது. நான் என்னுடைய பூமியை கம்பிவேலி அமைத்து பாதுகாத்து வைத்துள்ளேனா என்றால் க.ச.எண்.465/21 ல் காலை முழுவதுமாக கட்டிடம்உள்ளது, க.ச.எண்.465/2 காலையில் வேலி இல்லை.

2. க.ச.எண்.465/21, 465/2 காலையில் தடம் உள்ளதாக சொன்னால் அது தவறு. க.ச.எண்.465 காலையானது மொத்தம் 15 - 20 நபர்களுக்கு சொந்தமானது. மேற்படி 15 - 20 நபர்களுக்கு இடையே முறையே பாகப்பிரிவினை ஏற்படவில்லை என்றால் சரிதான். மேற்படி காலையில் பாகப்பிரிவினை ஏற்பட்டால் தான் முறையான தட வசதி ஏற்படுத்த முடியும் என்றும், அது வரை பொதுவில் அவரவர்கள் சௌகரியத்திற்கு சென்று வருகிறார்கள் என்றால் சரிதான். பாகப்பிரிவினை செய்வதற்காக எங்களது பெற்றோர் காலத்தில் பேசப்பட்டது, அப்போது பாகப்பிரிவினைக்கு ஒத்து வரவில்லை. தற்போதும் பாகப்பிரிவினைக்கு 4 -5 ஆண்டுகளாக கேட்டபோதும், பாகதாரர்கள் ஒத்துவரவில்லை.

3. க.ச.எண்.465 காலையானது மொத்தம் 22 உட்பிரிவுகள் ஆகியுள்ளது என்றால் ஆமாம். மேற்படி உட்பிரிவுகளில், சட்ட பூர்வமாக தடம் என்பது இல்லை என்றால் சரிதான். உட்பிரிவிற்கு முன்பாக பழைய தடத்தில் அனைவரும்

சென்று வந்தோம். பழைய தடம் என்பதற்கு ஆவணம் இல்லை என்றால் சரிதான். க.ச.எண்.465 காலையுடன் க.ச.எண்.489, 490 ஆகிய காலைகள் அனைத்தும் ஒரே கூட்டு பாகஸ்தர்களுக்கு பாத்தியப்பட்டது என்றால் அது மட்டுமல்ல, இன்னும் 10 – 15 காலைகள் கூட்டாக பாத்தியம், இவை அனைத்தும் ஒரு குடும்பத்தில் இருந்து வந்த சுமார் 6 தலைமுறை வாரிசுகளுக்கு சொந்தமானது. மேற்படி வாரிசுகளுக்குள் முறையான பாகப்பிரிவினை ஏற்படவில்லை என்றால் சரிதான்.

4. தாவா தடம் எத்தனை உட்பிரிவுகளில் செல்கிறது என்று தெரியாது என்றால் சரிதான். 2 ம் வாதி காளிமுத்து எனது உறவினர் ஆவார். எனக்கு இந்த வழக்கு பற்றி எதுவும் தெரியாமல் காளிமுத்து உறவினர் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய பூமி வழியாக தடம் செல்வதாக பிரதிவாதி தரப்பில் சொன்னதாக, 2 ம் வாதி காளிமுத்து ஆவணத்தை காண்பித்தார். என்னுடைய பூமி வழியாக தடம் செல்லவில்லை. சந்திரகுமார் ஏற்படுத்திய செட்டில்மெண்ட் பத்திரத்தில் என்னுடைய பூமியில் தடம் செல்வதாக காண்பித்தார். சந்திரகுமார் ஏற்படுத்திய பத்திரத்தில் மேற்கண்டவாறு தான் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அவ்வாறு எழுதியது தவறு ஆகும்.

5. சந்திரகுமார் பத்திரம் ஏற்படுத்தி சுமார் 10 ஆண்டுகள் இருக்கும். என்னுடைய தாத்தா 1969 ல் கட்டிடம் கட்டினார். என் அப்பா 1984 ல் கட்டிடம் கட்டினார். நான் 2011 ல் கட்டிடம் கட்டினேன். பின்னிட்டு அதில் தடம் செல்வதாக சந்திரகுமார் எழுதியுள்ளார். அவர்களின் மூல பத்திரத்தில் தடம் எதுவும் இல்லை. அவ்வாறு தடம் இருப்பதாக எழுதியது தவறு என்றும் அதை ரத்து செய்யக்கோரி நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். நான், சந்திரகுமாரை அழைத்து பேசியபோது பாகசாசனம் செய்யும்போது சரிசெய்து கொள்ளலாம் என்று சொன்னார். வசந்தகுமார் பூமியில் தடம் செல்வதாக சந்திரகுமார் எழுதியுள்ளார்.

6. என்னுடைய பூமியில் தடம் விட நான் தயாராக உள்ளேனா என்றால் எனது பூமியில் கட்டிடம் உள்ளது. என்னுடைய பூமியில் கட்டிடம் உள்ளது என்பதற்கு ஆவணம் உள்ளதா என்றால் ஆமாம், வேண்டுமென்றால் தாக்கல் செய்கிறேன். அவ்வாறு கட்டிடம் எதுவும் இல்லை என்றும், நானும், வாதியும்

எங்களது பூமிக்குள் தடம் செல்லக்கூடாது என்றும், மற்றவர்கள் பூமியில் தான் தடம் செல்ல வேண்டும் என்றும், வாதி தாக்கல் செய்த பொய் வழக்கிற்கு நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur